**நெல்லியாளம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் 28.04.2023 ஆம் தேதி காலை வெள்ளிக்கிழமை 11.00 மணிக்கு இந்நகராட்சியின் நகர்மன்றக் கூட்ட அரங்கில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகளின் விவரம்.**

நகர்மன்ற தலைவர்,
நெல்லியாளம் நகராட்சி

**பொருள் எண்.1**

வட்டாட்சியர் பந்தலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ2/599/2022, நாள்.10.04.2023–ன் படி பந்தலூர் வட்டம் நெல்லியாளம் 1 கிராமம் புல எண்.2323/3, 2323/7, 2333/9–ல் காலையில் இலவச வீட்டுமனை பட்டா ஆக்கிரமிப்புகளை வரமுறைப்படுத்தி 6 நபர்களுக்கு மேற்கண்ட புல எண்ணில் இலவச வீட்டுமனை பட்டா வழங்குவதற்கு நெல்லியாளம் நகராட்சியின் நகர்மன்ற தீர்மானம் ஏற்றி தீர்மானம் நகல் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பயனாளிகளின் விபரம்**

| வ.எண். | பயனாளிகளின் பெயர் மற்றும் முகவரி | கிராமம் | புல எண் | ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பரப்பு (ஹெக்டேரில்) |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.ரெங்காயி க/பெ.தங்கையா இரும்புபாலம் பந்தலூர் | நெல்லியாளம் 1 | 2333/3 | 0.00.73 |
| 2 | திருமதி.கவிதா க/பெ.ராமலிங்கம் இரும்புபாலம் பந்தலூர் | நெல்லியாளம் 1 | 2333/3 | 0.01.05 |
| 3 | திருமதி.பத்மாவதி க/பெ.ராமராஜ் இரும்புபாலம் பந்தலூர் | நெல்லியாளம் 1 | 2333/7 | 0.00.72 |
| 4 | திருமதி.கனிமொழி க/பெ.ஆனந்தராஜ் இரும்புபாலம் பந்தலூர் | நெல்லியாளம் 1 | 2333/7 | 0.00.87 |
| 5 | திருமதி.திருச்செல்வி க/பெ.இளங்கேஸ்வரன் இரும்புபாலம் பந்தலூர் | நெல்லியாளம் 1 | 2333/9 | 0.01.20 |
| 6 | திருமதி.பிரமிளா க/பெ.விஜயகுமார் இரும்புபாலம் பந்தலூர் | நெல்லியாளம் 1 | 2333/9 | 0.01.20 |
| **மொத்தம்** | | | | **0.05.77** |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 123 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.2**

நெல்லியாளம் நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள தேவையற்ற பொருட்கள், மரச்சாமான்கள், பிளாஸ்டிக் பொருட்கள், உடைந்த நிலையில் உள்ள குப்பைத்தொட்டிகள், சாலை ஓரங்களில் உரிமைக்கோராத வாகனங்கள், பயன்பாட்டில் இல்லாத வாகனங்கள், பயன்பாட்டில் இல்லாத பொருட்கள், மேலும் உலோகம் அல்லாத பிற மரச்சாமான்கள் மற்றும் குப்பைக்கிடங்கில் உள்ள தேவையற்ற கழிவு பொருட்கள் அனைத்தும் ஏலம் விடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண். 124 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.3**

2022–2023ம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோக செய்தல் ரூ.15.00 இலட்சத்திற்கு 29.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.ராஜேந்திரன் | 5.34 % அதிகம் |
| 2 | திரு.பாலசந்தர், ஒப்பந்ததாரர் | 0.00 % மதிப்பீட்டு தொகைக்கே ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பாலசந்தர், ஒப்பந்ததாரர் என்பவர் (0.00%) மதிப்பீட்டு தொகைக்கே ஒப்பந்தப்புள்ளியினை அளித்துள்ளார். ஆகவே இவ்வொப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 125 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.4**

2022–2023ம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோகம் செய்யும் மோட்டார்களுக்கு 6 மாத பராமரிப்பு செய்தல் ரூ.9.00 இலட்சத்திற்கு 29.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.செய்தலவி,ஒப்பந்ததாரர் | 0.44 % குறைவு |
| 2 | திரு.தெய்வேந்திரன், ஒப்பந்ததாரர் | 3.61 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.செய்தலவி, ஒப்பந்ததாரர் என்பவர் 0.44% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 126 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.5**

2022–2023ம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் *அம்பலக்கொல்லியில் சின்டெக்ஸ் டேங்க் மற்றும் மேடை அமைத்தல்* ரூ.0.50 இலட்சத்திற்கு 18.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.தெய்வேந்திரன்,ஒப்பந்ததாரர் | 0.01 % அதிகம் |
| 2 | திரு.பாபுவர்கீஸ், ஒப்பந்ததாரர் | 0.05 % குறைவு |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பாபுவர்கீஸ், ஒப்பந்ததாரர் என்பவர் 0.05% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 127 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.6**

2022–2023ம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் *நெல்லியாளம் நகராட்சி பொறியாளர் அறை மற்றும் பொறியியல் பிரிவு கதவு மற்றும் விளக்குகள் பொருத்தல் மற்றும் இருக்கைகள் வாங்குதல்* ரூ.0.90 இலட்சத்திற்கு 18.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.தெய்வேந்திரன்,ஒப்பந்ததாரர் | 0.01 % அதிகம் |
| 2 | திரு.பாபுவர்கீஸ், ஒப்பந்ததாரர் | 0.05 % குறைவு |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பாபுவர்கீஸ், ஒப்பந்ததாரர் என்பவர் 0.05% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 128 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.7**

2022–2023ம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் *பந்தலூர் காலனியில் சின்டெக்ஸ் மேடை மற்றும் உப்பட்டி பகுதியில் கால்வாய் மேற்தளம் Slab அமைத்தல்* ரூ.1.25 இலட்சத்திற்கு 18.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.தெய்வேந்திரன்,ஒப்பந்ததாரர் | 0.05 % குறைவு |
| 2 | திரு.பாபுவர்கீஸ், ஒப்பந்ததாரர் | 0.01 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.தெய்வேந்திரன், ஒப்பந்ததாரர் என்பவர் 0.05% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 129 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.8**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகள் தனியார் நிறுவனமான Schnell Energy Equipments, கோவை அவர்களால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நெல்லியாளம் நகராட்சியில் கீழ்காணும் 1302 விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண். | விளக்குகளின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1) | எல்.ஈ.டி விளக்குகள் (15 W) | 1048 |
| 2) | சோடியம் மின் விளக்குகள் (250W) | 111 |
| 3) | குழல் விளக்குகள் (40W) | 89 |
| 4) | சி.எப்.எல் விளக்குகள் (32W) | 50 |
| 5) | உயர்மின் கோபுர விளக்குகள் (400W) | 4 |
| | **மொத்தம்** | **1302** |

மேற்காணும் சோடியம் மின் விளக்குகள், குழல் விளக்குகள், சி.எப்.எல் விளக்குகள் மற்றும் உயர் மின் கோபுர விளக்குகள் குறைந்த மின்னழுத்தம் காரணமாக அடிக்கடி பழுது ஏற்படுகின்றது. இதனால் பொதுமக்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் வியபாரிகளிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. ஆகவே இவ்விளக்குகளை எல்.ஈ.டி விளக்குகளாக மாற்றி அமைக்கவும், மின் கட்டண செலவினத்தினை குறைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண். 130 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது</u>**

**<u>பொருள் எண்.9</u>**

பார்வை– நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 748/08/குவ2 நாள்.21.09.2000

**** ******

பார்வையில் காணும் சுற்றறிக்கையில் 2(ஊ))–ல் தெரிவித்துள்ளப்படி, புதிய குடிநீர் கட்டணத்திற்கு ஒவ்வொரு வருடமும் நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய தொகை முந்தைய ஆண்டின் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும் (ஏப்ரல் 1–ம் தேதி முதல்) விண்ணப்பப்படிவம் எந்த நிதியாண்டில் வழங்கப்பட்டு தொகை செலுத்தப்படுகிறதோ அந்த நிதியாண்டிற்கான தொகை வசூலிக்கப்பட வேண்டும் என்பதற்கிணங்க 2023–2024 ஆம் ஆண்டிற்க்கு கீழ்கண்டவாறு தொகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் சல்லி சாலை ரூ. | தார் சாலை ரூ. | சிமண்ட் சாலை ரூ. |
|---|---|---|---|---|
| 1) | 0 – 30 மீட்டர் நீளத்திற்கு | 2079 | 4456 | 5144 |
| 2) | 30 – 90 மீட்டர் நீளத்திற்கு | 3269 | 5645 | 6164 |
| 3) | மேற்பார்வை கட்டணம் | ரூ.1301/– | | |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி அளிக்கலாம்

**<u>தீர்மானம் எண். 131 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது</u>**

**<u>பொருள் எண்.10</u>**

2022–2023ம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் *நாடுகாணி பஜார் 21 ஆம் வார்டில் பொது கழிப்பிடம் சீரமைப்பு செய்தல்* ரூ.1.50 இலட்சத்திற்கு 20.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.P.K.முகம்மது, ஒப்பந்ததாரர் | 2.15 % குறைவு |
| 2 | திரு. மாரிமுத்து, ஒப்பந்ததாரர் | 5.35 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.P.K.முகம்மது ஒப்பந்ததாரர் என்பவர் 2.15% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண். 132 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது</u>**

**பொருள் எண்.11**

2022–2023ம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் *அத்திக்குன்னா மசினியம்மன் கோவில் அருகில் சிமெண்ட் காங்கிரீட் நடைபாதை மற்றும் கால்வாய் அமைத்தல்* ரூ.2.00 இலட்சத்திற்கு 20.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.சிவபிரகாசம், ஒப்பந்ததாரர் | 4.66 % அதிகம் |
| 2 | திரு.சசிக்குமார், ஒப்பந்ததாரர் | 2.03 % குறைவு |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சசிக்குமார் ஒப்பந்ததாரர் என்பவர் 2.03% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 133 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.12**

2022–2023ம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் *தேவாலா வாழக்கெல்லி பகுதியில் உள்ள சமுதாயகூடம் மற்றும் பொதுக்கழிப்பிடத்தை சீரமைத்தல்* ரூ.5.00 இலட்சத்திற்கு 20.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.சிவபிரகாசம், ஒப்பந்ததாரர் | 8.75 % அதிகம் |
| 2 | திரு.P.ராஜா, ஒப்பந்ததாரர் | 2.12 % குறைவு |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.P.ராஜா, ஒப்பந்ததாரர் என்பவர் 2.12% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 134 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.13**

2022–2023ம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் *உப்பட்டி பஜார் பொது கழிப்பிடம் சீரமைப்பு செய்தல்* ரூ.2.00 இலட்சத்திற்கு 20.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.லிங்கராஜ், ஒப்பந்ததாரர் | 0.13 % குறைவு |
| 2 | திரு. சசிக்குமார், ஒப்பந்ததாரர் | 15.28 % குறைவு |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.லிங்கராஜ், ஒப்பந்ததாரர் என்பவர் 0.13% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 135 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.14**

2022–2023ம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் *எம்.ஜி.ஆர் நகரில் சேம்பர் கட்டி PVC குழாய் மூலம் கழிவு நீர் கொண்டு செல்லுதல்* ரூ.1.50 இலட்சத்திற்கு 20.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. சுஹைப்பு, ஒப்பந்ததாரர் | 0.55 % அதிகம் |
| 2 | திரு. லோகநாதன், ஒப்பந்ததாரர் | 0.29 % குறைவு |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.லோகநாதன், ஒப்பந்ததாரர் என்பவர் 0.29% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 136 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.15**

நெல்லியாளம் நகராட்சியின் 2022–2023 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 137 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.16**

நெல்லியாளம் நகராட்சியில் 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டிற்க்கு மக்கும் குப்பை மக்கா குப்பைகளை பெற 30 எண்ணிக்கை Stainless Steel Bin-கள் வாங்கப்பட்டது. தற்போது இப் Bin –கள் அனைத்தும் நகர்பகுதிகள், சுற்றுலா பகுதிகள், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் கடை தெருக்களில் பொதுமக்கள் பயன்படும் வண்ணம் அமைக்க ரூ.64000/– செலவில் உள்ளூர் விலைப்புள்ளி பெற்ற செய்து முடிக்கப்பட்டுள்ளது. ஆகவே அதற்கான பட்டியல் தொகையினை திரு.A.T.அசரப், ஒப்பந்ததாரருக்கு வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 138 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.17**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 இல் அண்ணாநகர் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான தொலைக்காட்சி கட்டிடம் ஒன்று உள்ளது. இக்கட்டிடமானது இடியும் தருவாயில் உள்ளது என நகர்மன்ற உறுப்பினர் தெரிவத்ததின் பேரில், நேரில் ஆய்வு செய்யப்பட்டது. அக்கட்டிடமானது மிகவும் பழமையானது, தற்போது கூரை மற்றும் கட்டிடம் மிகவும் சிதைவடைந்து இடியும் தருவாயில் உள்ளது. இனிவரும் காலம் மழைக்காலம் என்பதாலும், அக்கட்டிடத்தினை சுற்று வீடுகள் உள்ளதாலும் இக்கடிடமானது இடிந்து எந்தவித அசம்பாவிதமும் நடக்கா வண்ணம் இக்கட்டிடத்தினை இடிக்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண். 139 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது</u>**

**<u>பொருள் எண்.18</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க எண். 9514/2022/தி1 தூ.இ.தி, நாள் 11.05.2022-ன் படி நகராட்சிகளின் தூய்மையான மக்கள் இயக்கத்தின் மூலம் ஒவ்வொரு 2வது மற்றும் 4வது சனிக்கிழமைகளில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி மிகச் சிறப்பாக செயல்படுத்தும் நகராட்சி தூய்மை பணியாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியனவற்றிக்கு சிறப்பு பரிசு வழங்கி கௌரவிக்க்ப்படுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே வரும் காலங்களில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி சிறப்பாக செயல்படுத்தப்படும் நபர்களுக்கு நகராட்சியின் மூலமாக நினைவு பரிசுகள் மற்றும் கேடயம் வழங்க வேண்டியுள்ளது. எனவே அதற்கு ஆகும் உத்தேச செலவினத்தை ரூ. 30000/- 2023-2024 ஆம் ஆண்டுக்காக பொது நிதியிலிருந்து அவ்வப்போது ஏற்படும் சில்லரை செலவு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண் / 2023/அ3

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) இப்பணியாளர் அவசரம் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணியை மேற்கொண்டமைக்கு.

**<u>தீர்மானம் எண். 140 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது</u>**

**<u>பொருள் எண்.19</u>**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பெரும்பாலும் தோட்ட தொழில் செய்யும் மக்கள் அதிகம் உள்ளனர். மேலும் பெரும்பாண்மையான மக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளனர். ஆகவே புதிய குடிநீர் இணைப்பிற்கு செலுத்தும் மொத்த தொகையினை ஒரே தவணையில் செலுத்த இயலாததால், பொதுமக்களின் நலன் கருதி அத்தொகையினை 5 தவணைகளாக பெற்றுக்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண். 141 /2023, நாள்.28.04.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது</u>**

ஒப்பம்

**(<u>திருமதி. சி.சிவகாமி.</u>)**

நகர்மன்ற தலைவர்,
நெல்லியாளம் நகராட்சி.

**<u>// உண்மை நகல் //</u>**

ஆணையாளர்,
நெல்லியாளம் நகராட்சி.